தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 6, திருவள்ளுவர் ஆண்டு–2055

2024 ஜூன் 20, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.”

இந்த உலகமானது, நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்து விட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ். மாணிக்கராஜ் அவர்கள் 24–1–2024 அன்றும், திரு. இ. ரவிக்குமார் அவர்கள் 26–02–2024 அன்றும், டாக்டர் வி. தனராஜ் அவர்கள் 7–3–2024 அன்றும், திரு. வ. சின்னசாமி அவர்கள் 10–3–2024 அன்றும், டாக்டர் எ. இராமகிருஷ்ணன் அவர்கள் 24–3–2024 அன்றும், திரு. அ. கணேசமூர்த்தி அவர்கள் 28–3–2024 அன்றும், திரு. சு. சிவராமன் அவர்கள் 3–4–2024 அன்றும், திரு. ச. வேணுகோபால் அவர்கள் 7–4–2024 அன்றும், திரு. ஆ.கு.சீ. அன்பழகன் அவர்கள் 7–4–2024 அன்றும், திரு. இராம வீரப்பன் அவர்கள் 9–4–2024 அன்றும், திருமதி இரா. இந்திரகுமாரி அவர்கள் 15–4–2024 அன்றும், திரு. எச்.எம். ராஜு அவர்கள் 1–5–2024 அன்றும், திரு. சி. வேலாயுதன் அவர்கள் 8–5–2024 அன்றும், திரு. தா. மலரவன் அவர்கள் 17–5–2024 அன்றும், திருமதி தா. இராசாம்பாள் அவர்கள் 22–5–2024 அன்றும், திரு. மொ. பரமசிவம் அவர்கள் 29–5–2024 அன்றும் மற்றும்

[பேரவைத் தலைவர்] [2024 ஜூன் 20

திரு. சி. இராமநாதன் அவர்கள் 2–6–2024 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். மாணிக்கராஜ் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் நாங்குநேரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. இ. ரவிக்குமார் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் பொன்னேரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.

டாக்டர் வி. தனராஜ் அவர்கள் 1989–1991 ஆம் ஆண்டுகளில் வந்தவாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. வ. சின்னசாமி அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் சேந்தமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புற பணியாற்றினார்கள்.

டாக்டர் எ. இராமகிருஷ்ணன் அவர்கள் 1989–1991 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் அச்சரப்பாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாகப் பணியாற்றினார்கள். மேலும், 1989–1990 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் நன்கு பணியாற்றினார்கள்.

திரு. அ. கணேசமூர்த்தி அவர்கள் 1989–1991 ஆம் ஆண்டுகளில் மொடக்குறிச்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 1998–1999, 2009–2014 மற்றும் 2019–2024 ஆகிய ஆண்டுகளில் மக்களவை உறுப்பினராகவும் திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. சு. சிவராமன் அவர்கள் 1980–1984 மற்றும் 1985–1988 ஆகிய ஆண்டுகளில் சின்னசேலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ச. வேணுகோபால் அவர்கள் 1985–1988 ஆம் ஆண்டுகளில் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புற பணியாற்றினார்கள்.

2024 ஜூன் 20] [பேரவைத் தலைவர்]

திரு. ஆ.கு.சீ. அன்பழகன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் பெரணமல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. இராம வீரப்பன் அவர்கள் 1986–1988 ஆம் ஆண்டுகளில் திருநெல்வேலி தொகுதியிலிருந்தும், 1991–1996 ஆம் ஆண்டுகளில் காங்கேயம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1977–1983 மற்றும் 1983–1986 ஆகிய ஆண்டுகளில் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1977–1980, 1980–1984, 1985–1988 மற்றும் 1991–1995 ஆகிய ஆண்டுகளில் அமைச்சராகவும் திறம்படப் பணியாற்றினார்கள்.

திருமதி இரா. இந்திரகுமாரி அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் நாட்ராம்பள்ளி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 1991–1996 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் நன்கு பணியாற்றினார்கள்.

முற்பகல் 10–05

திரு. எச்.எம். ராஜூ அவர்கள் 1989–1991, 1991–1996 மற்றும் 2001–2006 ஆகிய ஆண்டுகளில் உதகமண்டலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சி. வேலாயுதன் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் பத்மநாபபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. தா. மலரவன் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூர் மேற்கு தொகுதியிலிருந்தும், 2011–2016 ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூர் வடக்கு தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள்.

திருமதி தா. இராசாம்பாள் அவர்கள் 1980–1984 மற்றும் 1985–1988 ஆகிய ஆண்டுகளில் தலைவாசல் தொகுதியிலிருந்து

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. மொ. பரமசிவம் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் வானூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. சி. இராமநாதன் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் விருத்தாசலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) குவைத் நாடு, தீ விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழு பேர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குவைத் நாட்டின் மங்காப் என்ற இடத்தில் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டடத்தில் 12–6–2024 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழு பேர் உள்ளிட்ட சிலர் உயிரிழந்தது குறித்தும், படுகாயமடைந்தது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

உயிரிழந்தவர்களின் உடல்களை தமிழ்நாட்டிற்கு உடனடியாகக் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, உரிய துரித நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்கள்.